செய்தி வெளியீடு எண் :2345 நாள் : 24.11.2023

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னையில் நடைபெறவுள்ள ஃபார்முலா ரேஸிங் சர்க்யூட் – 2023 (F4) போட்டிக்கான டிக்கெட் விற்பனையை தொடங்கி வைத்து முதல் டிக்கெட்டை பெற்றுக்கொண்டார்.**

இந்திய மோட்டர் ஸ்போர்ட்ஸ் வரலாற்றில் சிறப்பு நிகழ்வாக தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT), பெருநகர சென்னை மாநகராட்சி (GCC), சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம் (CMDA), ரேஸிங் புரோமோஷன்ஸ் பிரவைட் லிமிடெட் (RPPL) ஆகியவை இணைந்து இந்தியாவின் மோட்டார் ஸ்போர்ட்ஸ் தலைநகரான சென்னையில் "சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட் (F4) நடத்தப்படவுள்ளது.

சென்னையில் ஃபார்முலா ரேஸிங் சர்க்யூட் – 2023 (F4) இந்தியன் சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேசிங் லீக் ஆகியவை சென்னை தீவுத் திடல் மைதானத்தை சுற்றியுள்ள 3.5 கி.மீ சுற்றளவு சாலைகளில் இரவு போட்டியாக (Street Circuit) நடத்தப்படுகிறது. தீவுத் திடலில் இருந்து ஃபிளாக் ஸ்டாஃப் ரோடு – அண்ணா சாலை – சிவானந்த சாலை – நேப்பியர் பாலம் வழியாக மீண்டும் தீவுத் திடல் வரை நடைபெறுகிறது.

இந்தியா மற்றும் தெற்காசியப் பகுதிகளில் முதல் முறையாக இரவுப் போட்டியாக சாலைகள் வழியாக நடத்தப்படுகின்ற மிகப் பெரிய மோட்டார் ரேஸ் இதுவாகும். இந்த சிறப்புமிக்க இரண்டு சாம்பியன்ஷிப் போட்டிகளிலும் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஆண்கள் மற்றும் பெண்கள் ஓட்டுநர்கள் பங்கேற்க உள்ளனர்.

ஃபார்முலா F4 இந்தியன் சாம்பியன்ஷிப் என்பது FIA–சான்றளிக்கப்பட்ட சாம்பியன்ஷிப் ஆகும். இந்தப் போட்டியினை தமிழ்நாட்டில் நடத்துவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் 40.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

சென்னையில் ஃபார்முலா ரேஸிங் சர்க்யூட் – 2023 (F4) போட்டி சிறப்பாக நடத்துவது தொடர்பான ஆலோசனை கூட்டம் இன்று (24.11.2023) சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் விளையாட்டுத் துறை, சென்னை பெருநகர மாநகராட்சி, நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை, மின்வாரியம், சுற்றுலாத் துறை , குடிநீர் வழங்கல் துறை மற்றும் காவல் துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த கூட்டத்தில் ஃபார்முலா ரேஸிங் சர்க்யூட் – 2023 (F4) போட்டிக்கான டிக்கெட் விற்பனையை தொடங்கி வைத்து முதல் டிக்கெட்டை ரேஸிங் புரோமோஷன்ஸ் பிரவைட் லிமிடெட் (RPPL) தலைவர் திரு. அகிலேஷ் ரெட்டி

அவர்களிடமிருந்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

முன்னதாக மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னையில் 2023 டிசம்பர் 9 மற்றும் 10–ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள சென்னை ஃபார்முலா ரேஸிங் சர்க்யூட் – 2023 (F4) போட்டிக்கான முன்னேற்பாடு பணிகளை இன்று (24.11.2023) நேரில் ஆய்வு செய்தார்.

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில்,**

"வருகின்ற டிசம்பர் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் F4 இந்தியன் சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேஸிங் லீக் சென்னை தீவுத் திடல் மைதானத்தை சுற்றியுள்ள சாலை வீதிகளில் இரவுப் போட்டியாக நடைபெற உள்ளது. திட்டமிட்டப் படி போட்டிக்கான ஆயத்தப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மேலும், தலைமைச் செயலகத்தில் அனைத்து துறை உள்ளடக்கிய முன்னேற்பாடு தொடர்பான கலந்தாய்வு கூட்டம் நடைபெற உள்ளது.

தற்போது நடந்து வரும் பணிகளில் பார்வையாளர் மாடம் உள்ளிட்ட சில தற்காலிக கட்டமைப்பு வசதி போட்டிக்காக ஏற்படுத்தப்பட உள்ளது. ஆனால், போட்டிக்கான சாலை போடும் பணி என்பது இது போன்ற போட்டிகளை நடத்துவதற்கு ஏதுவான வகையில் அமைக்கப்படுகிறது.

விளையாட்டு மற்றும் சுற்றுலாவிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் சென்னையின் மையப்பகுதியான தீவுத்திடல் சுற்றுவட்டார பகுதியில் இந்த போட்டி நடைபெற உள்ளது.

இந்த ஆய்வின்போது மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர் பாபு அவர்கள், திரு. கலாநிதி வீராசாமி எம்.பி. அவர்கள், மாண்புமிகு சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா அவர்கள், துணை மேயர் திரு. மு.மகேஷ் குமார் அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர். அதுல்யா மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் தலைமை செயலாளர் / ஆணையாளர் டாக்டர். ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள், போக்குவரத்து காவல்துறை துணை ஆணையாளர் திரு.சமய் சிங் மீனா இ.கா.ப., அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் முனைவர். ஜி. எஸ். சமீரன் இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அரசுத் துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in